

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (05.06.2025) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், 3,000வது குடமுழுக்காக நடைபெற்ற ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருப்புகலூர், அக்னீஸ்வரர் சுவாமி திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவில் ஆதீன பெருமக்கள் மற்றும் இறையன்பர்களுடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், மண்டல இணை ஆணையர் வி.குமரேசன், துணை ஆணையர் பி.ராணி, உதவி ஆணையர் எஸ். இராஜாஇளம்பெருவழுதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் திட்டத்தின் சார்பில் அங்கன்வாடி மையங்களில் முன் பருவ கல்வி பயிலும் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் விழா உத்திரமேரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்றது.இதில் காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் கலந்துகொண்டு முன்பருவ கல்வியில் பயிலும் குழந்தைகளுக்கு வண்ண சீருடை, செயல்பாட்டு புத்தகம் மற்றும் விளையாட்டு பொருட்கள் ஆகியவை வழங்கினார். உத்திரமேரூர் வட்டாரத்தில் முன் பருவக் கல்வியில் பயிலும் 3745 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ஞானசேகரன்,குமார்,பேரூர் செயலாளர் பாரிவள்ளல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள்,திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கருமந்துறை அரசு உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி மாணவி

# ராஜேஷ்வரிக்கு சென்னை ஐ.ஐ.டி.யில் பயில வாய்ப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – கல்வியாளர்கள் பாராட்டு!

சென்னை, ஜூன் 6-

கல்வராயன் மலை, கருமந்துறை அரசு உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி மாணவி ராஜேஷ்வரிக்கு சென்னை ஐ.ஐ.டி.யில் பயில இடம் கிடைத்துள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் மாணவியை பாராட்டியுள்ளனர்.

சேலம் மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதி அருகே உள்ளது கருமந்துறை கிராமம். இந்த கிராமத்தை சேர்ந்தவர்கள் ஆண்டி கவிதா தம்பதியினர்.

இவர்களுக்கு ஜெகதீஸ்வரி, ராஜேஸ்வரி, பரமேஸ்வரி மூன்று மகள்களும், ஸ்ரீ கணேஷ் என்ற ஒரு மகனும் உள்ளனர். டெய்லர் வேலை பார்த்து வந்த ஆண்டி தனது பிள்ளைகளை எப்படியாவது படிக்க வைத்து பெரிய ஆளாக்க வேண்டும் என்று கனவு கண்டுள்ளார். அதற்காக கடுமையாக உழைத்து வந்திருக்கிறார். ஆனால் கடந்த ஆண்டு உடல்நலக் குறைவு காரணமாக ஆண்டி உயிரிழக்க பட்டதாரியான அவரது மகன் ஸ்ரீ கணேஷ் தந்தை தொழிலான டெய்லர் வேலையைச் செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில் கருமந்துறை அரசு உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் படித்து வந்த இளைய மகள் ராஜேஸ்வரி பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 438 மதிப்பெண்களும், பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 521 மதிப்பெண்களும் எடுத்து அசத்தியுள்ளார். பின்பு படிப்பை வைத்து வாழ்கையில் சாதித்து அப்பாவின் கனவை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணிய ராஜேஸ்வரிக்கு பொறியியல் படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்துள்ளது. அதற்காக கடின உழைப்பைச் சிந்திய ராஜேஸ்வரி பெருந்துறையில் உள்ள அரசு பயிற்சி மையத்தில் சேர்ந்து படித்து ஜே இ.இ தேர்வு எழுதியுள்ளார். அதில் அகில இந்திய அளவில் 417வது இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் ராஜேஸ்வரிக்கு சென்னை ஐஐடியில் பயிலுவதற்கு இடம் கிடைத்துள்ளது.

இந்த தொடர் உழைப்பின் பலனாக தமிழகத்தில் பழங்குடியின சமூகத்தில் இருந்து சென்னை ஐஐடிக்கு படிக்கச் செல்லும் முதல் பெண் என்ற பெருமையை ராஜேஸ்வரி பெற்று சாதனை படைத்துள்ளார்.

அவருக்கு பல தரப்பில் இருந்தும் பாராட்டுகலும் வாழ்த்துகளும் குவிந்த வண்ணம் உள்ளது.

### நெல்லை மாவட்டம் பாபநாசம் அணையில் இருந்து ஜூன் 3 ஆம் தேதி

# சாகுபடிக்கு தண்ணீர் திறக்க உத்தரவிட்ட திராவிட மாடல் முதல்வருக்கு நன்றி!

## நெல்லை மாவட்ட பொதுமக்கள் – விவசாயிகளின் சார்பாக இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஜூன் 6 -

நெல்லை மாவட்டம் பாபநாசம் அணையில் இருந்து ஜூன் 3 ஆம் தேதி முன்கார் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க உத்தரவிட்ட திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு நெல்லை மாவட்ட பொதுமக்கள் - விவசாயிகளின் சார்பாக நல்வாழ்த்துக்களையும்,நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளன்று தண்ணீர் திறப்பது நெஞ்சம் நிறைந்த கூயடுதல் மகிழ்ச்சியை தருகிறது.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள நன்றி அறிவிப்பு விவரம் வருமாறு.

தமிழ்நாடு முதலமைச்சராக தாங்கள் பதவியேற்று நான்கு ஆண்டுகளில் இந்திய ஒன்றியத்தில் தமிழகம் முதன்மை மாநிலமாகவும், திராவிட மாடல் ஆட்சி செய்து, தங்களின் ஓயாத உழைப்பின் மூலம் சாதனைகளை செய்து தமிழகம் அனைத்து துறைகளிலும் தன்னிறைவை அடைந்து நல்லாட்சி செய்து வரும், தங்களுக்கு நெல்லை மாவட்ட பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் சார்பாக நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடை கிறேன்.

திருநெல்வேலி,தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவைகளையும்,நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்களில் விவசாயம் செய்வதற்கு தாமிரபரணி ஆறு பூர்த்திசெய்து வருகிறது.

தாமிரபரணி பாபநாசம் அணையில் இருந்து ஒவ்வொரு வருடமும்,ஜீன் 1ந்தேதி கார் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது வழக்கம். இதன் மூலம் அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, பாளையங் கோட்டை, திருநெல்வேலி ஆகிய தாலுகாக்களில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களில் விவசாயம் நடைபெற்று, பல ஆயிரக்கணக்கான விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருகிறது.

ஆனால் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கார் சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படாததால், அந்த பகுதிகளில் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, விவசாயி கள் கஷ்ட ஜீவனம் செய்து வந்தனர். கழக ஆட்சி அமைந்ததும் கார் சாகுபடிக்கு ஜீன் 1ம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று தாங்கள்தேர்தல் பிரசா ரத்தின் போது கூறிய தின் அடிப்படையில்,கழக தேர்தல் வாக்குறுதியிலும் ஜீன் 1ம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று கூறப்பட்டதின்படி, “சொன்னதை செய்வோம் செய்வதை சொல்வோம்” என்ற தலைவர் கலைஞர் அவர்களின் கூற்றின்படி நெல்லை மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கடந்த 4 ஆண்டுகளாக தண்ணீர் திறக்க ப்பட்டு, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 85,000 ஏக்கர் விவசாய நிலங்களில் விவசாயம் செய்யப்பட்டு,விவசாயிகள் பலன் அடைந்தனர்.

அதுபோல இந்த வருடம் முன்கார் சாகுபடிக்கு வடக்கு கோடைமேல் அழகியான் கால்வாய்,தெற்கு கோடை மேல்அழகியான் கால்வாய், நதியுண்ணி கால்வாய்,கன்னடியன் கால்வாய்,திருநெல்வேலி மற்றும் பாளையம்கால்வாய் ஆகிய கால்வாய்களில் தண்ணீர் (இன்று ஜீன் 3ம் தேதி)திறக்க ஆணையிட்டு உள்ளீர்கள். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் தண்ணீர் திறப்பது நெஞ்சம் நிறைந்து கூடுதல் மகிழ்ச்சியை தருகிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்,அவர்களால் உழைப்பு! உழைப்பு!! உழைப்பு!!! என பாராட்டு பெற்ற நம் தலைவர் அவர்கள்.இன்று கலைஞர் அவர்கள் இருந்திருந்தால் நம் தலைவர் அவர்களைப் பற்றி சாதனைகள்!!! சாதனைகள்!!! சாதனைகள்!!! என்று சொல்லுகின்ற அளவிற்கு பாராட்டி மகிழ்ந் திருப்பார்கள்.

அந்த அளவிற்கு சிறப்பாக செயல்பட்டு திருநெல்வேலி மாவட்ட விவசாயி கள் நலம் காக்க ஜீன் 3ம் தேதி திறக்க ஆணையிட்ட முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பிலும், நெல்லை மாவட்ட பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் நன்றி அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய் தீர்வாயம் 1434–ம் வருவாய் தீர்வாயம் நிறைவு நாளில் வருவாய் தீர்வாயா அலுவலகத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ். சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப், ஆகியோர் முன்னிலையில் 226 பணியாளருக்கு ரூபாய் 1.05 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வாங்கினார்கள் உடன் ஒன்றிய செயலாளர் என். கிருஷ்ணன், கோட்டாட்சியர் கனிமொழி, வட்டாட்சியர் மலர்விழி, அலுவலக மேலாளர் கமல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி 500 நபர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. பகுதி செயலாளர் இரா லட்சுமணன் தலைமையில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, பொது மக்களுக்கு சிற்றுண்டி வழங்கினார்.உடன் என்.மருதுகணேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், ந.கோதண்டன், மா.நாகராஜன், ப.குமார், ச.தமிழ்ச்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், குமாரி நாகராஜன் எம்.சி, மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ2 பாகமுகவர்கள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள்

# மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் விரிவாக்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 6

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.06.2025) சென்னை, கிண்டி, திரு. வி.க.நகர் தொழிற்பேட்டையில், சிறு வணிக நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் தொழிலாளர்களை தேடி பணியிடம் சார்ந்த தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள், மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் விரிவாக்கம் செய்யப்படும் முகாமினை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, தமிழ்நாட்டில் தொடர்ந்து பல்வேறு திட்டங்கள் மக்கள் நல்வாழ்வுத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் 118 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது. ஆகையால் இன்று அறிவிப்பு எண் 111 செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் கடந்த 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சாமணப்பள்ளியில் தொடங்கி வைத்தார். முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் தொடங்கும்போது ஒரு கோடி பயனாளர்களை சென்றடையும் திட்டமாக இருக்க வேண்டும் என்கின்ற வகையில் அவர்களுடைய விருப்பத்தை தெரிவித்தார்.

ஆனால் இத்திட்டம் பெரிய அளவில் வெற்றி அடைந்து இத்துறையின் அலுவலர்கள் கடினமாக உழைத்து குறிப்பாக களப் பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை துறையினால் இத்திட்டம் இன்று 2 கோடியே 34 இலட்சத்து 88 ஆயிரத்து 431 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக 2 கோடி பேர் தாண்டிய அளவிற்கு பயன்பெற்றிருக்கும் நிலையில் 2024 செப்டம்பர் திங்கள் 25 ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கில் ஐ.நா மன்றம் உலகில் தொற்றா நோய்களுக்கு வீடுகளுக்கே தேடி சென்று மருத்துவம் பார்க்கின்ற நாடு எது என்று அவர்கள் ஆராய்ந்து அறிந்தபோது தமிழ்நாடு மிகச் சிறப்பாக இந்த திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை கண்டுபிடித்து தமிழ்நாட்டிற்கு United Nation Interagency Task Force Award 2024 விருதினை மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு ஐநா மன்றம் வழங்கியது.

**தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம் !**

2024 ஜனவரி திங்கள் 09 ஆம் தேதி நான் வீடுகளுக்கு தேடிச் சென்று மக்களிடம் பரிசோதனை செய்யும்போது ஆண் தொழிலாளர்களாக இருந்தாலும் தொழிற்கூடங்களில் பணியாற்றுகின்ற மகளிராக இருந்தாலும் தொழிற்கூடங்களுக்கு சென்று விடுவதால் அவர்களுக்கும் தொழிற்சாலைகளுக்கே சென்று மக்களைத் தேடி மருத்துவம் எனும் திட்டத்தின் படி, அவர்களுக்கான பரிசோதனைகளை மேற்கொள்வது என்கின்ற வகையில் திருவள்ளூர் மாவட்டம் ஹீண்டாய் மோசிஸ் (Hyundai Mosis) கம்பெனியில் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தோம்.

இந்த திட்டத்தில் முதற்கட்டமாக 711 தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற 8,35,000 பேரை கணக்கில் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதில் இதுவரை 3,90,111 பேர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 30,506 பேருக்கு புதிய நோய் பாதிப்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை நோய் பாதிப்புகள் அறியாது வாழ்ந்துக் கொண்டிருப்பவர்களை அதாவது நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் அல்லது இரண்டும் சேர்ந்து இருப்பது என்கின்ற நிலைகள் தெரியாமல் இருந்தவர்கள் 30,506 பேர். மேலும் ஏற்கெனவே தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர் சிகிச்சைகள் என்கின்ற வகையில் 12,468 பேருக்கு வழங்கப்பட்டு கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் இத்திட்டத்தை மேலும் விரிவுப்படுத்திடும் வகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, அறிவிப்பு எண் 111ன்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறு வணிக நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தொற்றா நோய் பரிசோதனைகள் மக்களைத் தேடி மருத்துவம் எனும் திட்டத்தின்படி வழங்கப்படும் என்கின்ற அறிவிப்பின்படி, இன்றைக்கு சென்னை, கிண்டி, திரு.வி.க.நகர் தொழிற்பேட்டையில் பரிசோதனைகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நிறுவனத்தில் மட்டும் 250 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இன்று தொடங்கப்படும் இந்த திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 7,750 சிறுவணிக நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் உள்ள 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்ளுக்கு பயன்பெறும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 8 இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெறும்வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதைப் பொறுத்தவரை தகவல் தொழில்நுட்ப தொழிலாளர்கள், வணிக நிறுவனங்களில் பணிபுரிவர்கள் என்கின்ற வகையில் 6 இலட்சம் பேரை முதற்கட்டமாக இலக்கு வைத்து இத்திட்டத்தை இன்றைக்கு தொடங்கி இருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி தெற்கு வட்டார துணை ஆணையர் அமீத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், நகர நல அலுவலர் மரு. ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பூண்டி மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு பூண்டி நெய்வேலி கூட்ரோடு, சதுரங்கப்பேட்டை, கைவண்டூர் ஆகிய ஊராட்சிகளில் ஒன்றிய கழக செயலாளர் டி.கிறிஸ்டி(எ) அன்பரசு தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு அறுசுவை உணவு பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினார் அருகில் பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.மோதிலால், நிர்வாகிகள் பொன்.பாண்டியன், வி.எஸ்.நேதாஜி, பாஸ்கர், லட்சுமணன், தங்கனூர் ஆனந்த், சித்ரா ரமேஷ், நடராஜன், தேவேந்திரன், டில்லிபாபு, சௌகார்பாண்டியன், காஞ்சிபாடி சரவணன் வி.எஸ்.சதீஷ், எம்.எம்.லிங்கேஷ்குமார், ஹேமநாதன், இரா. தனசேகர், சுதாகர் டேவிட், பொன் ராஜா சிங், விக்ரம், தன்ராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் (NRTIA) – பஹ்ரைன் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு ரத்ததான முகாம் நடத்தப்பட்டது.இந்நிகழ்வு தலைவர் முஹமது ஹுசைன் மாலிம் தலைமையில், செயல் தலைவர் கருணாநிதி சண்முகம் மற்றும் துணை பொறுப்பாளர்கள் ஆலோசனையின் பேரில் சிறப்பாக நடைபெற்றது. துணை பொறுப்பாளர் மன்னை முபாரக் ஒருங்கிணைத்த இந்த முகாமில் 74 நபர்கள் ரத்ததானம் செய்தனர்.நிகழ்வின் அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. காணொளி வாயிலாக உரையாற்றி வாழ்த்து தெரிவித்தார்.இந்த நிகழ்வில் நிர்வாகிகள் இஸ்மாயில், கபீர் அஹமத், சதீஷ், திருமேனி, சபீக்,லலித், சங்கீதா பாபு, முபாரக்அலி, முகமது ஆரிஃப், மணிவண்ணன், ஆபித் அலி, பிரபாகரன், அசோக், டேவிட், செல்வகுமார், ஸ்ரீதர் சிவா, ஆசாத் மைதீன், சல்மான் மாலிம், சேகர், சாகுல், முகமது சலீம், சாராபுதீன், முஹைதீன், ஷாஹுல் ஹாஜா, அக்பர் அலி, அல்லா பிச்சை கலந்துகொண்டு சிறப்பித்தனர்.